**LITERATURE IN TAMIL**

# தமிழ் இலக்கியம்

**GCE O-LEVEL**

Syllabus for 2098 Literature in Tamil

## 1 தேர்வு

1.1 தமிழ் இலக்கியத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்கும் மாணவர்கள் தாள் 1 (2098/1), தாள் 2 (2098/2) ஆகிய இரு தாள்களுக்குத் தேர்வு எழுத வேண்டும்

1.2 தேர்வு எழுதத் தாள் 1-க்கு (2098/1) ஒன்றரை மணி நேரமும் தாள் 2-க்கு (2098/2 அல்லது 2204/7) **1 மணி 40 நிமிடங்களும்** வழங்கப்படும்.

1.3 தாள் 1-இல் ‘அ’ , ‘ஆ’ என்னும் இரு பிரிவுகள் இருக்கும். ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு வினாக்கள் இடம்பெறும். மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து ஆக மொத்தம் இரண்டு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

1.4 இதேபோல் தாள் 2-லும் ‘அ’ , ‘ஆ’ என்னும் இரு பிரிவுகள் இருக்கும். ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு வினாக்கள் இடம்பெறும். மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து ஆக மொத்தம் இரண்டு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

## 2 தேர்வு விவர அட்டவணை பின்வருமாறு அமையும்:

| பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரண நிலைத் தேர்வு<br>தமிழ் இலக்கியம் | | | | | |
|---|---|---|---|---|---|
| தாள் எண் | பாடப்பொருள் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | விடையளிக்க வேண்டியவை | மதிப்பெண்கள் |
| 2098/1 | <u>‘அ’ பிரிவு</u><br>செய்யுள்கள் மற்றும் கட்டுரைகள் | வரையறுக்கப்பட்ட கட்டுரை வகை வினாக்கள் | 2 | 1 | 25 மதிப்பெண்கள் |
| | <u>‘ஆ’ பிரிவு</u><br>தற்கால நாடகங்கள் | வரையறுக்கப்பட்ட கட்டுரை வகை வினாக்கள் | 2 | 1 | 25 மதிப்பெண்கள் |
| 2098/2 | <u>‘அ’ பிரிவு</u><br>தற்கால உரைநடை மற்றும் கவிதைகள் | வரையறுக்கப்பட்ட கட்டுரை வகை வினாக்கள் | 2 | 1 | 25 மதிப்பெண்கள் |
| | <u>‘ஆ’ பிரிவு</u><br>இலக்கியத் திறனாய்வு (பார்த்திராத பனுவல்) | வரையறுக்கப்பட்ட கட்டுரை வகை வினாக்கள் | 2 | 1 | 25 மதிப்பெண்கள் |

## 3 வினாத்தாளில் இடம்பெறும் வினாக்கள்

### 3.1 <u>தாள் 1 : ‘அ’ பிரிவு</u>

3.1.1 பாடப்பனுவல்களாகக் கொடுக்கப்பட்டுள்ள செய்யுள்கள், கட்டுரைகள் ஆகியவற்றைப் பற்றிய பாராட்டுரை, கருத்துரை, விளக்கவுரை இன்னபிற எழுதுதல்

### 3.2 <u>தாள் 1 : ‘ஆ’ பிரிவு</u>

3.2.1 பாடப்பகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ள நாடகங்களையொட்டிப் பொதுவான வினாக்கள் இடம்பெறும். அவை நாடக நிகழ்ச்சிகள், பாத்திரப்படைப்பு, குணவியல்புகள் இன்னபிற அடிப்படையில் அமையும்.

### 3.3 <u>தாள் 2 : ‘அ’ பிரிவு</u>

3.3.1 பாடப்பனுவல்களான குறுநாவல், சிறுகதை ஆகியவற்றைச் சார்ந்து பொதுவான வினாக்கள் இடம்பெறும். பாத்திரங்களின் பண்பு நலன்கள், கதைப்பின்னணி, கருத்துகள் இன்னபிற கூறுகளைச் சோதிக்கும் வகையில் வினாக்கள் அமையும்.

3.3.2 கருத்து, சொல்லாட்சி, உவமையழகு, கற்பனைத்திறம் இன்னபிற கூறுகளைச் சோதிக்கும் வகையில் பாடப்பனுவல்களாகக் கொடுக்கப்பட்டுள்ள தற்காலக் கவிதைகளிலிருந்து வினாக்கள் இடம்பெறும்.

### 3.4 <u>தாள் 2 : ‘ஆ’ பிரிவு</u>

3.4.1 மாணவர்கள் முன்பு பார்த்திராத (Unseen Text) சிறுகதைகள், தற்காலக் கவிதைகள் ஆகியவை கொடுக்கப்பட்டுத் திறனாய்வு அடிப்படையில் கேள்விகள் கேட்கப்படும்.

3.4.2 கதையாக இருப்பின், கதைத்திருப்பம், கதாசிரியர் கையாண்டுள்ள உத்திகள், பாத்திரப் படைப்புகள், ஆசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள் இன்னபிற கூறுகளைச் சோதிக்கும்வண்ணம் வினாக்கள் அமையும்

3.4.3 கவிதையாக இருப்பின் கருத்து, சொல்லாட்சி, உவமையழுகு, கற்பனைத்திறம், இன்னபிற கூறுகளைச் சோதிக்கும்வண்ணம் வினாக்கள் அமையும்.

## 4. பாடப்பனுவல்கள்

### <u>தாள் 1</u>

### 4.1 **செய்யுள்கள்**

4.1.1 திருக்குறள் (நான்கு அதிகாரங்களிலிருந்து இருபது குறள்கள் மட்டும்)

(அ) மக்கட் பேறு (குறள்கள் 61, 64, 67, 69, 70)
(ஆ) விருந்தோம்பல் (குறள்கள் 81, 82, 88, 89, 90)
(இ) ஆள்வினை உடைமை ( குறள்கள் 611, 615, 616, 619, 620)
(ஈ) நட்பு ஆராய்தல் ( குறள்கள் 791, 795, 796, 797, 798)

4.1.2 நாலடியார் (மணிமேகலை பிரசுர வெளியீடு)

பின்வரும் தலைப்புகளில் இடம்பெற்றுள்ள நான்கு செய்யுள்கள் மட்டும்
(அ) சினமின்மை - காவாது ஒருவன் தன் வாய் ...
(ஆ) பெரியாரைப் பிழையாமை - கல்லாது போகிய நாளும் ....
(இ) சுற்றந்தழால் - அழல் மண்டு போழ்தில் ...
(ஈ) அறிவுடைமை - நன்னிலைக் கண் தன்னை ...

4.1.3 தலைப்பு : பாஞ்சாலி சபதம் – சுப்ரமணிய பாரதியார்
சபதச் சுருக்கம் - பாடல் 69 முதல் 79 வரை
(வீமன் சொல்வது, அர்ஜுனன் சொல்வது)

4.1.4 தலைப்பு : அழகு - பாரதிதாசன்
நூல் : அழகின் சிரிப்பு (3 பாடல்கள் – 24 வரிகள்)

4.1.5 தலைப்பு : உறுதி வேண்டும் - சுப்பிரமணிய பாரதியார்
மனதிலுறுதி வேண்டும்,
வாக்கினி லேயினிமை வேண்டும்;
... ... ... ... ... ... ... ... ... ... ...
உண்மை நின்றிட வேண்டும். (15 வரிகள்)

## 4.2 கட்டுரைகள்

4.2.1 நூல் : நல்வாழ்வு (ஆசிரியர் டாக்டர் மு. வரதராசன்)
தலைப்பு: மனவலிமை வேண்டும் (இந்த ஒரு கட்டுரை மட்டும்)

4.2.2 நூல் : தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம் - (ஆசிரியர்: டாக்டர் அ. சிதம்பரநாதன்)
தலைப்பு : பழந்தமிழ்ப் புலவர் சிறப்பியல்புகள் . (6 பக்கங்கள்)

4.2.3 நூல் : அலையும் கலையும் (ஆசிரியர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை)
தலைப்பு: மேடைப் பேச்சு (இந்த ஒரு கட்டுரை மட்டும்)

4.2.4 நூல் : ஐந்து செல்வங்கள் (ஆசிரியர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம்)
தலைப்பு: தாய்ச் செல்வம் (இந்த ஒரு கட்டுரை மட்டும்)

## 4.3 நாடகம்

4.3.1 நாடகம் 1 : மூன்று நாடகங்கள் (இளங்கோ என்னும் தலைப்பிலான ஒரு நாடகம் மட்டும்)
ஆசிரியர் : டாக்டர் மு. வரதராசன்
வெளியீடு : டாக்டர் மு. வ. பதிப்பக வெளியீடு
மறுபதிப்பு : 2003

4.3.2 நாடகம் 2 : விழிப்பு (தேசிய நாள் சிறப்புத் தொலைக்காட்சி நாடகம்)
ஆசிரியர் : புதுமைதாசன்

## தாள் 2

### 4.4 சிறுகதைகள்

பின்வரும் தலைப்பிலான சிறுகதைகள் மட்டும் தேர்வுக்கு உரியவை:

- கூரை ஓட்டில் ஓர் எலி - ரெ. கார்த்திகேசு (மலேசியா)
- முகவரிப் புத்தகம் - ரம்யா நாகேஸ்வரன் (சிங்கப்பூர்)
- சிலிர்ப்பு - தி. ஜானகிராமன் ( தமிழ்நாடு)
- ஒட்டுண்ணிகள் - நா. கோவிந்தசாமி ( சிங்கப்பூர்)
- கலையின் விலை – அகிலன் ( தமிழ்நாடு)
- அடுக்குமாடி அனாதைகள் ( நவமணி சுந்தரம் –சிங்கப்பூர்)

### 4.5 குறுநாவல்

நூல் : கையில் ஒரு விளக்கு – ஜெயகாந்தன்
வெளியீடு : மீனாட்சி புத்தக நிலையம்

### 4.6 தற்காலக் கவிதைகள்

(அ) தலைப்பு : நரை

வாலிப நாடகம்
முடிந்தவுடன்
விடப் படுகின்ற
திரை ...
வயோதிக நூலுக்கு
வயது எழுதுகின்ற
முன்னுரை ...
இளமை நாயகன்
இறப்பை முன்னிட்டு –
முடியரசி
அணிந்து கொள்ளும்
வெள்ளாடை ...

முதுமை நிலா
முளைத்ததைக் கண்டு –
பொங்குகின்ற
கூந்தல் அலைகளின்
நுரை ...
வாழ்க்கையோடு போராடி
அலுத்து விட்ட
ஐம்புலன்களும் –
சமாதானத்திற்குச்
சம்மதித்துக் காட்டுகின்ற
வெள்ளைக் கொடி! -------------------------

- **கவிஞர் வாலி**
- **நூல்: பொய்க்கால் குதிரைகள்**

(ஆ) தலைப்பு : இன்பம்

பழந்தமிழ் கற்றல் இன்பம்
பல நாடு சுற்றல் இன்பம்
எழுந்திடு புதுமை தன்னை
ஏற்றிடல் வாழ்வுக் கின்பம்
குழந்தையின் தளிர்க்கை பட்ட
கூழினை உண்ப தின்பம்
இழந்ததைப் பெறுதல் இன்பம்
இசைபட வாழ்தல் இன்பம்!

கற்றவர் முன்தாம் கற்ற
கல்வியைக் கூறல் இன்பம்
வெற்றியை வாழ்வில் சேர்க்கும்
வினைபல புரிதல் இன்பம்
சிற்றினக் கயவ ரோடு
சேராது வாழ்தல் இன்பம்
பெற்றதை வழங்கி வாழும்
பெருங்குணம் பெறுதல் இன்பம்!

- **சுரதா**

(இ) தலைப்பு : ஏனோ?

காலையிலே பொன்மஞ்சள் பூசிக்
கவினொளிரும் பொன்மகளாய்த் தோன்றிச்
சேலையிலே பல்வண்ணம் கொண்டு
சிந்தையள்ள நடைபயின்ற வானே
மாலையிலே ஒளியெல்லாம் மாறி
மதிமுகமே சிவந்திடுதல் ஏனோ?
வேலையின்றி வீண்பொழுது போக்கும்
வீணர்மேல் கோபமுற்ற தாலோ?

வங்கமெல்லாம் சுமந்ததனால் தோன்றும்
வலிமறந்து இனியபண்ணும் இசைப்பாய்
அங்கமெல்லாம் குளிர்ந்தாலும் சற்றும்
அயர்ந்திலையே பெருங்கடலே அன்னாய்
இங்கொருகால் சீற்றந்தான் கொண்டே
எழிலுலகை அழித்திடுதல் ஏனோ?
பங்கமெல்லாம் நிறைந்தவர்கள் சற்றும்
பழுது நெறி விடாச்செயலைக் கண்டோ?

செல்லுயிரைக் காக்கும்நன் னோக்கில்
செழுங்கடலின் நீர்முகந்து வந்து
அல்லெனவே மெய்ம்மாறி நின்று
அகிலமதில் குளிர்புனலைப் பெய்து
பல்லுயிரைக் காக்கும் எழில் முகிலே
பாரியைப்போல் புகழ்கொண்ட நீ ஏன்
நல்லுயிரைக் கொல்வெள்ளம் ஆனாய்
நன்றியிலார் செயல்சினந்த தாலோ?

- **பார்வதி பூபாலன்**
- **நூல் : rhythms**

(ஈ) தலைப்பு : நலமெல்லாம் நம்மாலே

ஆழ்கடலின் நீரனைத்தும் சிற்றெ றும்பு
அருந்துவதால் வற்றிவிடப் போவ தில்லை!
ஆழ்கடலில் பொங்கியெழும் அலைகள் எல்லாம்
ஆருமிங்கே கணக்கெடுத்து முடிவதில்லை!
ஆழ்கடலில் புதைந்திருக்கும் வளத்தை யெல்லாம்
ஆராய்ந்து முடித்தவரும் உலகில் இல்லை!
ஆழ்கடல்போல் புகழ் கொண்ட சிங்கப் பூரின்
அருமைகளும் சொல்லியிங்கே முடிவ தில்லை!

இயற்கைவளம் இல்லாத சிறிய நாடு;
என்றாலும் முன்னேற்றம் கண்ட நாடு
முயற்சியினால் சிறந்தோங்க முடியும் என்னும்
முத்திரையைச் சரித்திரத்தில் பதித்த நாடு
அயர்வற்ற உழைப்புக்கோர் உவமை யாகி
அகிலமெல்லாம் பாராட்டைக் குவித்த நாடு
உயர்வான சிங்கப்பூர் தனைநி னைத்தால்
உருவாகும் பூரிப்பை உரைக்கப் போமோ.

பலமெல்லாம் வெளிப்படுதல் துணிவினாலே
பாட்டெல்லாம் சிறப்புறுதல் தாளத் தாலே
குலமெல்லாம் புகழ்பெறுதல் குணத்தினாலே
கொடிகளெல்லாம் அழகுபெறல் மலர்க ளாலே
நிலமெல்லாம் வளம்அடைதல் மழையி னாலே
நிழலெல்லாம் முகம்காட்டல் ஒளியி னாலே
நலமெல்லாம் சிங்கப்பூர் பெற்ற தென்றால்
நாளுமிங்கே நாம்புரிந்த உழைப்பி னாலே.

- **க.து.மு.இக்பால்**
- நூல் - memories & desires – A poetic history of Singapore.

(உ) தலைப்பு : பணி

| | |
|---|---|
| ‘பணி’யெனச் சொல்லும் போது<br>பணிந்திடல் என்ப தொன்றாம்<br>பணியென் றுரைக்குங் காலை<br>படியளந் திடுமாம் வேலை<br>தனித்தனி பொருளைத் தந்து<br>தகைந்திடும் சொல்லின் ஆக்கம்<br>‘பணி’யிது மனிதர்க் கென்றும்<br>பவித்திரம் வேண்டு மன்றோ?<br><br>‘எடுத்ததோர் பணி’யென் றாங்கு<br>இயம்பிடும் தொடரும் உண்டே;<br>தொடுத்துமே முடித்து விட்டார்;<br>செயல்திறன் குறிக்கும் அன்றோ?<br>கொடுத்திடும் பொறுப்பு தன்னைக்<br>குறையிலா வண்ணம் செய்து<br>அடுத்ததோர் செயலின் ஆக்கம்<br>ஆரம்பம் செய்வா ரம்மா! | வள்ளலார் அருளிச் சென்ற<br>வார்த்தைகள் மறக்கப் போமோ?<br>“நல்லறம் தழைக்க வேண்டின்<br>‘நற்பணி’ புரிதல் வேண்டும்”<br>சொல்பகர் பொருள்தான் என்ன?<br>தூய்மையாம் தொண்டே ஆகும்!<br>கல்மனம் கரையச் செய்யும்<br>காலத்தால் ஆற்றும் தொண்டு!<br><br>- **மு தங்கராசன்**<br>- **நித்திலப் பூக்கள்** |

4.7 **மாணவர் பார்த்திராத சிறுகதைகள், கவிதைகள்**

வார, மாத இதழ்கள், இணையம் ஆகியவற்றில் வெளிவருகின்ற சிறுகதைகள், தற்காலக் கவிதைகள் தேர்வுக்கு உரியனவாக அமையும். ஆனால், மாணவர்களுக்கு ஏற்புடைய வகையில் மாற்றியமைத்தும் தரப்படலாம். தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகள் குடும்பம், சமூகம், பள்ளி, உறவுகள் முதலானவை தொடர்பாக அமையலாம்.

(முற்றும்)